# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
## 2014/2015 (December – 2019)

## ED/S - 3213 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும்
## (Teaching Methods & Techniques)

---

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. அ. கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது மூவழித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமாகும். இச் செயற்பாடு எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

   ஆ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் புலக்காட்சித்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகவய, புறவயக் காரணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   இ. கலைத்திட்டம் என்பது ஒரு ஆவணப்படுத்தப்பட்ட கோவை அல்ல அது ஒரு இயங்குகின்ற செயற்பாடாகும். இதன்படி கலைத்திட்டமொன்றைத் தயாரிக்கும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான ஆறு (06) அம்சங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

2. அ. ரெயிலரின் கலைத்திட்ட மாதிரியில் காணப்படும் (Taylor's curriculum model) படிநிலைகளை விளக்கி இம்மாதிரியின் இரு சிறப்பம்சங்களை மதிப்பிடுக. (03 புள்ளிகள்)

   ஆ. "பாடத்திட்டம், பாட உள்ளடக்கம், கற்றல் அலகுகள் ஆகியவற்றுடன் குறிப்பிட்ட இலக்கினை அடைவதற்காக ஆசிரியர் தனது கற்றல் அனுபவங்களினூடாக அடையப்படும் செயற்பாடு கலைத்திட்டமாக கருதப்படுகிறது." இக் கூற்றின் அடிப்படையில் பாடசாலையில் இச்செயற்பாடு எவ்விதம் வினைத்திறனாக அமைகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   இ. "உலக நாடுகளில் பாடசாலைகளின் கலைத்திட்டங்கள் தேவைக்கு ஏற்ப மாற்றப்படுகின்றன" அவற்றுக்கான காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

3. அ. கலைத்திட்ட அபிவிருத்தி என்பதன் கருப்பொருள் பற்றிய உமது விளக்க
முன்வைத்து இதை எவ்வாறு பாடசாலையில் கட்டி எழுப்பலாம் என்பதை விள
(03 புள்ளி

ஆ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் விசேட குறிக்கோளை அமைப்
முக்கியத்துவம் ஆறினை (06) சுருக்கமாக விளக்குக. (04 புள்ளி

இ. வகுப்பறைச் செயற்பாட்டின் இறுதியில் விசேட குறிக்கோள
அடையப்பட்டுள்ளதா என்பதைப் பகுப்பாய்வு செய்து மாணவர்களின் நடத்
மாற்றத்தை எவ்வாறு மதிப்பிடுவீர் என விளக்குக. (07 புள்ளி

## பகுதி II

4. அ. "கலைத்திட்டத்தின் இலக்கானது பாடசாலையின் இலக்கினை அடை
வகையிலும் சமூகத்தின் தேவைகள் நிறைவேற்றப்படும் வகையிலும் அமை
அவசியமாகும்." இக்கூற்று இரண்டாம் நிலைப்பாடசாலைகளில் எவ்வளவு து
பயன்பாட்டில் உள்ளது என்பதை வியாக்கியானம் செய்க. (08 புள்ளிக

ஆ. "வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் ஒரு பாடவிடயத்தினூ
எதிர்பார்க்கும் **கற்பித்தலின் நோக்கம்,** அடைய உத்தேசிக்கும் **கற்பித்தல்** மா
இதனூடாகக் கையாளப்பட வேண்டிய **கற்பித்தல் முறை** ஆகியன வினைத்திறன
கற்பித்தலின் அடிப்படைக் கூறுகளாகும்." இது பற்றிய உமது கருத்தினை முன்வை
விளக்குக.
(08 புள்ளிக

இ. அறிகைசார் உளவியல் கோட்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்ப
கற்பித்தல் மாதிரியின் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்கி, இதன் கற்
நோக்கங்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிக

5. அ. கற்பித்தலில் வினாக்களின் பயன்பாடுகள் ஐந்தினைச் எடுத்துக் கூறி, வின
கேட்கும் ஆசிரியரிடம் இருக்க வேண்டிய இயல்புகள் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்
(05 புள்ளிகள

ஆ. இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்குக் கலந்துரையாடல் முறை மூலம் கற்பித்
சிறந்த பயனுடையதாக அறியப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் எட்டினைச்
சுருக்கமாக விளக்குக.
(09 புள்ளிகள்

இ. மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு, ஆசிரியரின் நடத்தையும், உளப்பாங்கும் வெற்றிகரமான கற்பித்தலுக்குப் உறுதுணையாக உள்ளன. இதனடிப்படையில் ஆசிரியர் வெளிப்படுத்தும் சிறப்பான நடத்தைகள் ஐந்தினை (5) விளக்குக.

(10 புள்ளிகள்)

6. அ. முன்திட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? நேர்த்திட்டம், கிளைத்திட்டம் ஆகியவற்றின் வகுப்பறை பிரயோகங்களைச் சுருக்கமாக விளக்கி, அதன் வினைத்திறனை எவ்வாறு மதிப்பிடலாம் எனக் கூறுக. (08 புள்ளிகள்)

ஆ. கற்பித்தலை ஒழுங்காகவும் சிறப்பாகவும் செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை ஒப்படை மூலம் கிடைக்கின்றது. இதன் அடிப்படையில் ஒப்படையில் அடங்க வேண்டிய அம்சங்களை கற்பித்தலில் எவ்வாறு பிரயோகிப்பீர் என்பதை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

இ. சிந்தனையின் மிக உயர்ந்த கட்டமான ஆய்வுச் சிந்தனையின் மூலம் மாணவன் எதிர்நோக்கும் பாடரீதியான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டங்களைப் பட்டியற்படுத்துக. (08 புள்ளிகள்)

7. அ. செயற்றிட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? இக் கற்பித்தல் முறையின் நன்மைகளை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ. "கலைத்திட்ட அமுலாக்கலில் பல்வேறு மட்டங்களில் உள்ளோர் ஒரே இலக்கின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் கலைத்திட்டம் அமுலாக்கப்படும்". மாகாண மட்டத்திலிருந்து எவ்வாறு பாடசாலையில் கலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதென்பதை விளக்குக. (08 புள்ளிகள்)

இ. வினைத்திறனுள்ள வகுப்பறைச் செயற்பாட்டுக்காகப் பாடத்திட்டமொன்றில் இருந்து வேலைத்திட்டம், பாடக்குறிப்பு தயாரிக்கப்படுமாற்றை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் : (பகுதி I) 28 + (பகுதி II) 72 = 100